29 APR 2009

021873

## சுருக்கம்

பெயர்மாற்றம் – இராமநாதபுரம் நகராட்சி – சில முக்கிய சாலைகளின் பெயர்களை பெயர்மாற்றம் செய்து கொள்ள இராமநாதபுரம் நகர்மன்றத்திற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை )எண்.59. நாள் 15.4.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 2

படிக்க:

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க. எண். 66013/ 2008/ எம்.1 நாள் 5.1.2009.
2. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், மதுரை கடிதம் ந.க. எண். 2905/2007/ அ5 நாள் 31.12.2008.
3. நகராட்சி ஆணையாளர் கூடுதல் பொறுப்பு, இராமநாதபுரம் கடித ந.க. எண்.3211/ 2008/எட்1 நாள் 15.12.2008.

---

**ஆணை:**

இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.அசன்அலி அவர்களால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அவர்களிடம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தெருக்களின் பெயர் மாற்றம் வேண்டி, கோரிக்கை வைக்கப்பட்டது. அதனடிப்படையில், தற்போது இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட தெருக்களின் பெயர்கள் மாற்றம் செய்ய இராமநாதபுரம் நகர்மன்ற தீர்மான எண். 720, நாள் 31.12.2008–ல் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| தற்போதுள்ள சாலையின் பெயர் | பெயர் மாற்றம் செய்வது |
|---|---|
| 1. சாலைத் தெரு | அறிஞர் அண்ணா சாலை<br>(சென்ட்ரல் கிளாக் முதல் ரோமன் சர்ச் பெரியார் ஸ்தூபி வரை) |
| 2. வண்டிக்காரத் தெரு | மகாத்மாகாந்தி சாலை<br>(முருகன் கோவில் அருகில் உள்ள உயர்கோபுர மின்விளக்கு முதல் கே.டி.எம். காம்ப்ளக்ஸ் வளைவு வரை) |
| 3. சிகில்ராஜவீதி | சுவாமி விவேகானந்தர் சாலை<br>(சென்ட்ரல் கிளாக் முதல் கேணிக்கரை பி.ஜி.மகால் வரை) |

எனவே, மேற்கண்ட தெருக்களின் பெயர்கள் மாற்றம் செய்வது குறித்து பரிசீலனை செய்து தகுந்த ஆணை பிறப்பிக்கும்படி இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர், முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலைகளின் பெயர் மாற்றம் செய்வது குறித்து, ஏற்கனவே பிரேரணை பெறப்பட்டு, பெயர் மாற்றம் செய்வது குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றுவதை தவிர்க்க வேண்டும் என்று அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது மேற்கண்ட அதே பொருள் மீது இராமநாதபுரம் நகர்மன்றம் பெயர் மாற்றம் செய்ய மீண்டும் தீர்மானம் எண்.720, நாள் 31.12.2008-ல் தீர்மானம் நிறைவேற்றி, அரசின் ஆணை வேண்டியுள்ளது என்றும், நடப்பாண்டு அண்ணா நூற்றாண்டு ஆண்டாக அரசால் அறிவிக்கப்பட்டிருப்பதால், அரசாணை எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.2001-ன்படி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், சாலைகள், தெருக்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் முதலியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றம் செய்வது போன்ற தீர்மானங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற ஆணையிலிருந்து விதி விலக்கு அளித்து இராமநாதபுரம் நகராட்சியில் சில முக்கிய சாலைகளின் பெயர்களை கீழ்கண்டவாறு மாற்றம் செய்ய அனுமதி அளிக்குமாறு மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளதாக அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

| தற்போதுள்ள சாலையின் பெயர் | பெயர் மாற்றம் செய்வது |
|---|---|
| 1. சாலைத் தெரு | அறிஞர் அண்ணா சாலை<br>(சென்ட்ரல் கிளாக் முதல் ரோமன் சர்ச் பெரியார் ஸ்தூபி வரை) |
| 2. வண்டிக்காரத் தெரு | மகாத்மாகாந்தி சாலை<br>(முருகன் கோவில் அருகில் உள்ள உயர்கோபுர மின்விளக்கு முதல் கே.டி.எம்.காம்ப்ளக்ஸ் வளைவு வரை) |
| 3. சிகில்ராஜவீதி | சுவாமி விவேகானந்தர் சாலை<br>(சென்ட்ரல் கிளாக் முதல் கேணிக்கரை பி.ஜி.பங்களா வரை) |

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்து மற்றும் இராமநாதபுரம் நகர்மன்றத்தின் தீர்மானம் ஆகியவற்றை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. நடப்பு ஆண்டு அண்ணா நூற்றாண்டாக அரசால் அறிவிக்கப்பட்டிருப்பதால் அரசாணை எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.2001-ன்படி, பெயர் வைப்பது மற்றும் பெயர் மாற்றம் செய்வது போன்ற தீர்மானங்களை

நகராட்சிகள் தவிர்க்கப்பட வேண்டும் என வெளியிடப்பட்ட ஆணையிலிருந்து விலக்களித்து, இராமநாதபுரம் நகர்மன்ற தீர்மான எண். 720, நாள் 31.12.2008-ல் பெயர் மாற்றம் செய்ய கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளபடி பெயர் மாற்றம் செய்ய இராமநாதபுரம் நகர்மன்றத்திற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

| தற்போதுள்ள சாலையின் பெயர் | பெயர் மாற்றம் செய்வது |
|---|---|
| 1. சாலைத் தெரு | அறிஞர் அண்ணா சாலை<br>(சென்ட்ரல் கிளாக் முதல் ரோமன் சர்ச் பெரியார் ஸ்தூபி வரை) |
| 2. வண்டிக்காரத் தெரு | அண்ணல் காந்தியடிகள் சாலை<br>(முருகன் கோவில் அருகில் உள்ள உயர்கோபுர மின்விளக்கு முதல் கேடி.எம்.காம்ப்ளக்ஸ் வளைவு வரை) |
| 3. சிகில்ராஜவீதி | சுவாமி விவேகானந்தர் சாலை<br>(சென்ட்ரல் கிளாக் முதல் கேணிக்கரை பிஜி. மகால் வரை) |

4. மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்கள் மேற்கண்ட பெயர் மாற்றம் குறித்த அரசு ஆணையினை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிக்கப் படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

டாக்டர். நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-600 005.
நகராட்சி ஆணையர், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலரின் நேர்முக செயலர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அந.2) துறை, சென்னை-600 009.
உதிரி நகல்/ இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
15/4/09